# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

நான்காம் வருட முதலாம் அரையாண்டிற்கான சிறப்பு கல்விமாணித் தேர்வு - 2013/2014 (மார்ச் - ஏப்ரல் - 2019)

## EDS - 4143 கல்வித்திட்டமிடலும் அபிவிருத்தியும்

## (Educational Planning and Development)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி - I

1. அ. "திட்டமிடல்" என்றால் என்ன என்பதனை அறிஞர்களின் வரைவிலக்கணங்களைக் கொண்டு தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

ஆ. "முகாமைத்துவத்தில் திட்டமிடல் ஒரு கூறாகும்" திட்டமிடலுக்கும், முகாமைத்துவத்திற்கும் இடையேயான தொடர்புகளை ஆராய்க. (05 புள்ளிகள்)

இ. திட்டமிடலின் முக்கியத்துவங்கள் நான்கினை 04 இனைக் குறிப்பிட்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

2. அ. திட்டமிடல் செயற்பாட்டின் படிமுறைகளைக் குறிப்பிட்டு உதாரணங்களின் மூலம் விளக்குக. (06 புள்ளிகள்)

ஆ. ஒரு பாடசாலை விளைதிறன் கொண்ட பாடசாலையாக உருவாவதற்கு அதிபரின் திட்டமிடல் முகாமைத்துவம் இன்றியமையாததாகும்" இதன் பொருத்தப்பாட்டை உதாரணங்கள் மூலம் ஆராய்க. (08 புள்ளிகள்)

3. அ. வெற்றிகரமான திட்டமொன்றைத் தயாரிக்கையில் கையாளக்கூடிய முன்னாயத்த நோக்கங்கள் மூன்றினைக் (03) குறிப்பிட்டு விளக்குக. (03 புள்ளிகள்)

ஆ. கல்வித்திட்டமிடலின் அடிப்படை அம்சங்களினைக் குறிப்பிட்டு சுருக்கமான விளக்கம் தருக. (05 புள்ளிகள்)

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2016/2017 (ஜூன் 2019)

# SAS 4143 Sociology of Media & Communication

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

## பகுதி – I

01 (அ) தகவல் நடைமுறையை (process) விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) புலப்பாட்டு அடிப்படையில் தகவல் தொடர்பு ஊடகங்களை வகைப்படுத்தி, தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

02. (அ) பண்பாடுகளுக்கிடையிலான தகவல் தொடர்பை அறிந்துகொள்ள பயன்படும் அணுகுமுறைகளை விபரிக்க.

(10 புள்ளிகள்)

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினூடாக குழந்தைகள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதை ஹைபோடெர்மிக் நீடில் தியரி (Hypordemic Needly Theory) எவ்வாறு விளக்குகின்றது. தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

03. (அ) கருத்துப் பரிமாற்றத்தில் முக்கிய அம்சங்களை விபரிக்க.

(08 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் தொடர்பு ஊடகங்கள் எவ்வாறு கட்டப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

## பகுதி – II

04. வெகுஜன ஊடகங்கள் தொடர்பான சமூகவியற் கோட்பாடுகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து, அவற்றின் பிரதான சிந்தனை முன்வைப்புக்களையும் அவை கொண்டிருக்கும் பலவீனங்களையும் மதிப்பீடு செய்க.

(20 புள்ளிகள்)

05. உலகம் கிராமமாகச் சுருங்கிவிட்டதென்ற கூற்றினை புதிய தகவல் தொழினுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

06. மக்கள் கருத்தினை தொடர்பு ஊடகங்கள் உருவாக்க முடியுமா? இலங்கையினை அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. “மரபு வழிச் சாதனங்கள் இன்றைய காலகட்டத்திலும் வெற்றிகரமான தகவல் தொடர்பு ஊடகங்களாகக் கருதப்படுகின்றன.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டை எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

(20 புள்ளிகள்)

*****